# QB365 Question Bank Software Study Material

## சந்தையிடுகை மற்றும் சந்தையிடுகையின் கலவை முக்கியமான 1 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 12ம் வகுப்பு

## வணிகவியல்

மொத்த மதிப்பெண் : 46

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

42 x 1 = 42

1) சந்தையிடுகை முறையின் ஆரம்ப நிலை ______

(அ) முற்றுரிமை முறை (ஆ) பணத்திற்கு மாற்றுதல் **(இ) பண்டமாற்று முறை** (ஈ) தற்சார்பு உற்பத்தி

2) சந்தையில் உயர் நிலையில் இருப்பவர் யார்?

**(அ) வாடிக்கையாளர்** (ஆ) விற்பனையாளர் (இ) மொத்த விற்பனையாளர் (ஈ) சில்லறை விற்பனையாளர்

3) கீழ்கொடுக்கப்பட்டுள்ள கூறுகளில் சந்தையிடுகை கலவைக்கு தொடர்பு இல்லாத ஒரு கூறு எது?

(அ) இடக் கூறு (ஆ) பொருள் கூறு **(இ) திட்டக்கூறு** (ஈ) விலை கூறு

4) சந்தையிடுகை கலவை என்பது சந்தையிடுகை திட்டமிடல் மூலம் நிறுவனத்தின் குறிக்கோள் _____ தேவை மற்றும் மன நிறைவு மூலம் லாபம் பெறுகிறது.

(அ) மொத்த விற்பனையாளர் (ஆ) சில்லறை விற்பனையாளர் **(இ) நுகர்வோர்** (ஈ) விற்பனையாளர்

5) கீழ்கண்டவற்றுள் கண்ணுக்கு புலப்படாத பொருள் எது?

**(அ) கல்வி** (ஆ) கைபேசி (இ) ஆடைகள் (ஈ) வாகனங்கள்

6) சந்தையிடுகை செயலானது புரட்சியை காட்டிலும் ________ வளர்ச்சிக்கு மேலான ஒன்றாகும்.

(அ) மனித **(ஆ) பரிணாம** (இ) பொருளாதார (ஈ) சந்தை

7) சந்தையிடுகை என்பது ________ என்ன செய்கின்றாரோ அதுவேயாகும்.

**(அ) சந்தையிடுகையாளர்** (ஆ) விற்பனையாளர் (இ) நுகர்வோர் (ஈ) மேலாளர்

8) இன்றைய பொருளாதார நிலை வாழ்க்கையின் மாற்றத்திற்கு ஒரு முன் உதாரணமாக திகழ்கிறது.

(அ) உற்பத்தி சார்ந்து (ஆ) சந்தையிடுகை சார்ந்து (இ) விற்பனை சார்ந்து **(ஈ) நுகர்வோர் சார்ந்து**

9) சந்தையிடுகையானது ________ மற்றும் ________ இணைக்கும் ஒரு தொடர் சங்கிலியாக செயல்படுகிறது.

**(அ) உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர்** (ஆ) உரிமையாளர் மற்றும் நுகர்வோர்
(இ) மொத்த வியாபாரி மற்றும் நுகர்வோர் (ஈ) இவற்றில் எதுவுமில்லை

10) சந்தையிடுகை கலவையின் கூறுகள்.

(அ) பொருள் (ஆ) விலை (இ) இடம் **(ஈ) இவை அனைத்தும்**

11) இடமாற்று பணிகளுள் ஒன்று

(அ) விற்பனை **(ஆ) போக்குவரத்து** (இ) கட்டுமம் (ஈ) சந்தை தகவல்

12) பொருட்களை விற்பனை செய்வதற்கு முன்னர் எளிதில் கையாளுவதற்கு ஏற்றவாறு உறையிடுவது ________.

**(அ) கட்டுமம்** (ஆ) பெயரிடல் (இ) வகைப்படுத்துதல் (ஈ) தரப்படுத்துதல்

13) பொருளுக்கு இடப் பயன்பாட்டை அளிப்பது

(அ) பண்டகச் சாலையிடுதல் (ஆ) விற்பனை **(இ) போக்குவரத்து** (ஈ) ஒன்று சேர்தல்

14) நுகர்வோர் நலன் கருதி பண்டகம் மற்றும் பணிகளுக்கு இணையான மதிப்பை மாற்றிக் கொள்ள தக்க ஒன்றுதான் ________.

(அ) விற்பனை **(ஆ) விலை** (இ) போக்குவரத்து (ஈ) கட்டுமம்

15) சரியான நேரத்தில் சரியான இடத்திற்கு கொண்டு செலவதற்கு ________ ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.

**(அ) இடம்** (ஆ) விலை (இ) கட்டுமம் (ஈ) விற்பனை

16) கீழ்க்கண்ட வாக்கியங்களுள் எது சந்தையிடுகைக்கு பொருந்தாத ஒன்று?

(அ) சந்தையிடுகை ஒரு தொழில் சார்ந்த பணியாகும்

(ஆ) விற்பனையைக் காட்டிலும் சந்தையிடுகை மேலானது ஆகும்

(இ) சந்தையிடுகை என்பது மனித தேவை மற்றும் விருப்பங்களை புர்த்தி செய்யும் ஓர் செயலாகும்

**(ஈ) மேற் சொன்னவற்றில் எதுவுமில்லை**

17) இத்தகைய சந்தையிடுகை பரிணாம வளர்ச்சியல் சந்தையில் பண்டங்கள் மட்டுமே பரிமாற்றிக் கொள்ளப்பட்டன.

(அ) உற்பத்தி சார்ந்த (ஆ) விற்பனை சார்ந்த (இ) சந்தையிடுகை சாரந்த **(ஈ) பண்டமாற்று முறை**

18) இத்தகைய சந்தையிடுகை பரினாம வளர்ச்சியில் நுகர்வோரின் விருப்பங்களுக்கு மாறாக இலாப நோக்கோடு அளிக்கப்பட்டது. அதிக அளவில் உற்பத்திக்கு மட்டுமே முக்கியத்துவம் _____.

**(அ) உற்பத்தி சார்ந்த** (ஆ) விற்பனை சார்ந்த (இ) சந்தையிடுகை சாரந்த (ஈ) பண்டமாற்று முறை

19) இத்தகைய சந்தையிடுகை பரினாம வளர்ச்சியில் விற்பனையே முக்கிய காரணியாக கருதப்பட்டது

(அ) உற்பத்தி சார்ந்த **(ஆ) விற்பனை சார்ந்த** (இ) சந்தையிடுகை சாரந்த (ஈ) பண்டமாற்று முறை

20) இத்தகைய சந்தையிடுகை பரினாம வளர்ச்சியில் வாடிக்கையாளரின் முக்கியத்துவம் உணரப்பட்டது.

(அ) உற்பத்தி சார்ந்த (ஆ) விற்பனை சார்ந்த **(இ) சந்தையிடுகை சாரந்த** (ஈ) பண்டமாற்று முறை

21) இத்தகைய சந்தையிடுகை பரினாம வளர்ச்சியில் நுகர்வோரின் விருப்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் போன்றவகைகளுக்கு முக்கியத்தும் அளிக்கப்பட்டது

(அ) உற்பத்தி சார்ந்த (ஆ) விற்பனை சார்ந்த (இ) சந்தையிடுகை சாரந்த **(ஈ) நுகர்வோர் சார்ந்த**

22) இத்தகைய சந்தையிடுகை பரினாம வளர்ச்சியில் சந்தையிடுகை திட்டமிடல், பொருள் மேம்பாடு செய்தல் மற்றும் வினியோகம் செய்தல் போன்றவற்றை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

(அ) உற்பத்தி சார்ந்த (ஆ) விற்பனை சார்ந்த (இ) சந்தையிடுகை சாரந்த **(ஈ) மேலாண்மை சார்ந்த**

23) சந்தையிடுகை

(அ) நாட்டின் வருமானத்தை உயர்த்த வழிவகை செய்கிறது (ஆ) வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது

(இ) மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது **(ஈ) மேற் சொன்ன அனைத்தும்**

24) உற்பத்தி செய்யும் இடத்திலிருந்து நுகர்வோருக்கு பண்டங்களையும் பணிகளையும் கொண்டு சேர்க்கும் அனைத்து வணிக நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது இதுவாகும்.

(அ) திட்டமிடல் (ஆ) ஒழுங்கமைத்தல் (இ) விளம்பரம் **(ஈ) சந்தையிடுகை**

25) B.B கிலஸ் சந்தையிடுகை பணியினை ________ பிரிவாக விவரித்துள்ளார்.

**(அ) 7** (ஆ) 8 (இ) 9 (ஈ) 3

26) கிளர்க் மற்றும் கிளார்க் போன்ற பேராசிரியர்கள் சந்தையிடுகை பணியினை __ வகைகளாகப் பிரித்துள்ளனர்.

**(அ) 3** (ஆ) 4 (இ) 5 (ஈ) 8

27) கிளார்க் மற்றும் கிளார்க் அவர்கிளின் கருத்துப்படி இது ஒரு சந்தையிடுகை பணி அல்ல.

(அ) உரிமை மாற்றுப் பணிகள் (ஆ) இடமாற்றுப் பணிகள் (இ) வசதி செய்யும் பணிகள்

**(ஈ) மேற் சொன்னவற்றில் எதுவுமில்லை**

28) இது சந்தையிடுதலில் உரிமை மாற்றுப் பணியாகும்.

**(அ) விற்பனை** (ஆ) போக்குவரத்து (இ) சரக்கு சேமிப்பு (ஈ) நிதியிடல்

29) இது சந்தையிடுகையின் இடமாற்றுப் பணியாகும்.

(அ) போக்குவரத்து (ஆ) சரக்கு சேமிப்பு (இ) பண்டகசாலையிடுதல் **(ஈ) மேற் சொன்ன அனைத்தும்**

30) பின்வருவனவற்றுள் ஒன்று சந்தையிடுகையின் வசதிப் பணிகளில் ஒன்று அல்ல.

(அ) நிதியிடல் (ஆ) இடர் ஏற்றல் (இ) தரப்படுத்துதல் **(ஈ) மேற் சொன்ன அனைத்தும்**

31) _____ என்பது பொருட்களை இயல்பான தரத்தின் அடிப்படையில் பிரித்து அமைப்பது ஆகும்.

(அ) வகைப்படுத்துதல் **(ஆ) தரப்படுத்துதல்** (இ) பெயரிடல் (ஈ) கட்டுமம் செய்தல்

32) நிர்ணயம் செய்யப்பட்ட தர அலகுகளின் அடிப்படையில், பொருட்களை பல வகைகளாகப் பாகுபாடு செய்தலை ___ என்கிறோம்.

**(அ) வகைப்படுத்துதல்** (ஆ) தரப்படுத்துதல் (இ) பெயரிடல் (ஈ) கட்டுமம் செய்தல்

33) பின்வரும் வாக்கியத்தில் தவறான ஒன்றை கண்டறிக.

(அ) போட்டி பொருட்களிலிருந்து வேறுபடுத்தி காண்பதற்கு ஒரு பெயரோ அல்லது வணிக குறியோ இடப்படுவதற்கு பெயரிடல் என்று பெயர்

(ஆ) பொருட்கள் விற்பனை செய்வதற்கு முன்னர் எளிதில் கையாளுவதற்கு ஏற்றவாறு உறையிடுவது கட்டுமம் எனப்படுகிறது

(இ) சந்தையிடுகை நடவடிக்கைக்கு போக்குவரத்து இன்றியமையாத ஒரு பணியாக உள்ளது

**(ஈ) மேற் சொன்னவற்றில் எதுவுமில்லை**

34) திரு ஜெரோமி எம்சி கார்தோ அவர்களின் கூற்றுப்படி சந்தையிடுகை கலவை கூறுகளைக் கொண்டுள்ளது.

**(அ) 4** (ஆ) 5 (இ) 6 (ஈ) 7

35) பின்வருவனவற்றுள் ஒன்று சந்தையிடுகை கலவையின் கூறு அல்ல.

(அ) பொருட்கலவை (ஆ) விலை கலவை (இ) இடக் கலவை **(ஈ) முன்னேற்பாடு கலவை**

36) சந்தையிடுகையின் பொருள் கூறில் இது இடம் பெறாது.

**(அ) போக்குவரத்து** (ஆ) வணிக குறி (இ) உருவம் (ஈ) இயல்புகள்

37) சந்தையிடுகை கலவையின் விலைக் கூறில் இது இடம் பெறாது.

**(அ) சரக்கிருப்பு** (ஆ) விலைப் பட்டியல் (இ) தள்ளுபடி (ஈ) மேற் சொன்ன எதுவுமில்லை

38) சந்தையிடுகையின் மேம்பாட்டுக் கூறில் இது அடங்கும்.

(அ) விளம்பரம் (ஆ) விற்பனை (இ) மேம்பாடு **(ஈ) மேற் சொன்ன அனைத்தும்**

39) நவீன சந்தையிடுகையின் கலவையில் ஒன்று இதுவாகும்.

(அ) மக்கள் (ஆ) செயல் முறை (இ) செயல் திறன் **(ஈ) மேற் சொன்ன அனைத்தும்**

40) இவற்றில் ஒன்று விளம்பர சாதனம் ஆகும்.

(அ) தொலைக்காட்சி (ஆ) வானொலி (இ) விளம்பர பலகை **(ஈ) மேற் சொன்ன அனைத்தும்**

41) இவற்றில் ஒன்று நவீன சந்தையிடுகையின் கலவைகளில் ஒன்று அல்ல.

(அ) மக்கள் (ஆ) திட்டம் **(இ) இடம்** (ஈ) செயல்முறை

42) இவற்றில் ஒன்று மரபு வழி சந்தையிடுகையின் கலவைகளில் ஒன்று அல்ல.

**(அ) திட்டம்** (ஆ) விலை (இ) இடம் (ஈ) பொருள்

## கோடிட்ட இடங்களை நிரப்புக 4 x 1 = 4

43) ________ என்பது பண்டங்கள் மற்றும் பணியின் மாற்று மதிப்பு ஆக பெறப்படும் ஒன்றாகும்.

**விலை**

44) ________ மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவுகிறது.

**சந்தையிடுகை**

45) உரிமைமாற்று பணி என்பது பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பை ________ அடிப்படையில் மாற்றுவதைக் குறிக்கிறது.

**பணத்தின்**

46) போட்டி பொருட்களிலிருந்து வேறுபடுத்திக் காண்பதற்கு ஒரு பெயரையோ அல்லது ________ யோ இடப்படுகிறது.

**வணிகக் குறி**